பிஸ்மில்லாஹி.

நபியுல்லா மானெனு

காரணக் கதை.

இதனோடு,

நபியுல்லா முஃஜி ஸாத்துமாலையும்

அடங்கியிருக்கிறது.

இந்நூல்,

மதுரைஜில்லா, செம்பூர், ஆசுகவி.

வித்வான் ஆறுமுகஞ் சேர்வை

அவர்களாலும்,

கோட்டாறு.

மகுதூம் பாவா காஸீம் தாகனரவர்கள்

குமாரர்,

வா-மு-முஹம்மது யூசுபு லெப்பை

அவர்களாலும்

பார்வையிடப்பட்டு,

ஷை யூர்

கு-ப-முஹியித்தீன் கண்ணுலெப்பை

அவர்களின் நன்முயற்சியினால்

சென்னை.

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1335.

ரிஜிஸ்டர் காப்பிரைட். [அணா-4.

OFFICE OF THE REGISTRAR ... 14 ... MADRAS

O.7
N35
176081

பிஸ்மில்லாஹி.

நபியுல்லா மானொடு பேசிய
காரணக் கதை.

இது,

கோட்டாறு.

மலுக்கு முதலி வைத்தியர் குமாரர்

மகா வித்வான்

வாவாஷி வைத்தியரென்று பெயர் விளங்காநின்ற

பாவா காஸீம் வைத்திய ரவர்களால்

இயற்றப்பட்டு,

மதுரைஜில்லா, செம்பூர், ஆசுகவி.

வித்வான் ஆறுமுகஞ் சேர்வை

அவர்களாலும்,

கோட்டாறு.

மருஹூம் பாவா காஸீம் தரகனாரவர்கள்

குமாரர்,

வா-மு-முஹம்மது யூசுபு லெப்பை

அவர்களாலும்

பார்வையிடப்பட்டு,

ஷை யூர்

கு-ப-முஹியித்தீன் கண்ணு லெப்பை

அவர்களின் நன்முயற்சியினால்

சென்னை.

அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜிரி 1335.

இதன் விலை] ரிஜிஸ்டர் காப்பிரைட். [அணா-4.

OFFICE OF THE REGISTRAR
14 APR 1917
MADR

ரிஜிஸ்டர் அறிக்கை.

சற்றேறக் குறைய 150-வருடத்திற்கு முன் இயற்றிருந்த நபி யுல்லாமானொடு பேசிய காரணக்கதை, யென்னும் இந்த அருமை யான நூலை இதுகாறும் எவராகிலும் அச்சிட்டு வெளியிடாதிருந்த தினால் தற்போது சிலகனவான்கள் அச்சிட்டு வெளியிட வேண்டு மென்று விருப்புற்று முயற்சி செய்ததினால் நாம் இந்த நூலை எடுத் தெழுதி அச்சிற் பதிப்பித்து இங்கிலீஷ் புதுவை இவைகளில் காப் பிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதினால் எமதனுமதியின்றி இதனை ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி மீறி அச்சிடுவார்களேயானால் அதனால் ஏற்படும் சகல நஷ்டத்தையும் அவர்களிடம், சட்டப்படி நாம் வசூல் செய்வோம்.

இங்ஙனம்,

வா-மூ-முஹம்மது யூசுபுலெப்பை,

கோட்டாறு.

சாத்துக்கவிகள்,

பாண்டிய மண்டலம் செவ்வல்மாநகரம்

வித்வான்

எம். ஏ. நெயினு முகம்மதுப் பாவல ரவர்கள்

இயற்றியது.

அகவற்பா.

எழுகடல் வளைந்த பழங்கண் ஞாலம்
முழுவதும் படர்ந்து மூடிரு ளிரிவான்
ஒளிகொடு மக்கம் உதித்த நம்பெருமான்
முகம்மது நயினர் முதிர்புகழ் தன்னில்
மிக்கதா மான் வசனித்த தோர் தக்க
அற்புத மான்மியம் அகிலத்தோ ருணர்ந்து
பொற்புறத் தெளிவான் புனைந்தனர் காதை
அன்னவ ரியாவ ரென்னிற் கேண்மினே
முன்னோர் குழாத்திற் பொன்னெனத் தோன்றும்
சீலகுணாகரர் மேலோர் குலத்தினர்
மருத்துவ இலக்கண வரம்பெலா முணர்ந்த
திருத்தகு சாஸ்திரி செகம்புகழ் நாயகர்
பிணியுளார் மனைவாய் கால்வைத்த மாத்திரம்
கால்வாசிதீரும் வாவாசி வைத்தியர்
பாவாகாசீம் எனும் பெயர்கொண்ட
தேவரும் புகழும் திருவுடை வள்ளல்
இப்பெரும் சிறப்பினர் இயற்றிய நூலை
தப்பற எழுதிப் பொற்புற வச்சிட்
டுலகம் பரத்தியோர் யாரெனிற் கோடை
மாநகர் பிறந்த மகத்துவக் கோமகன்
பாவாகாசீம் பாரவான் ஈன்ற
பத்திகொள் மேன்றகை புத்திர சுமுகன்
முகம்மது யூசுபு லெப்பை யென்றோங்கும்
அகநிலை கொண்ட அறிவுடை யோனே.

முற்றிற்று.

சாத்துக்கவிகள்.

மதுரை ஜில்லா, செம்பூர் வித்வான்
ஸ்ரீமத். வீ. ஆறுமுகஞ்சேர்வை யவர்களியற்றிய
சிறப்புக்கவிகள்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மண்டலத்தோ ரஞ்ஞான விருளிரியப்
பரிதியென வந்து மேன்மை,
கொண்டமுகம் மதுநபியார் குறைவகற்ற
மான்றனக்குப் பிணையாய் நின்று,
பண்டதனைக் காத்தகதை தனைத்தமிழாற்
பாடியுயர்பதவி பெற்றான்
தண்டலையார் கோடைநகர்ப் பாவாகா
சிமென்னுந் தமிழ் வல்லோனே.

இன்னவன்பா டியவிந்நூல் தமிழ்நாடெங்
கணும்பரவி யிலகுமாறு
நன்னலமா ரிதனையன்பி லெழுதுவித்து
நவையிலச்சி லாக்குவித்தான்
முன்னவன்ற னருட்பெரியர் வளர்கின்ற
கோட்டாறு முதியவூரில்
தென்னுறவே வாழுமுகம் மதுயூசு
பென்னுமதித் தெளிவுள்ளோனே.

முகவுரை.

மகர்கனம் வாவாசி வைத்திய ரவர்களின்

ஜீவிய காரண சரித்திரச் சுருக்கம்.

மகாகனம்,

"வாவாசி வைத்தியர், மஃரிபா என்ற ஞான உணர்ச்சியிலுய்' திப்பு என்னும் வைத்திய சாஸ்திரங்களிலும் பண்டைய காலத்தி லுக்குமானுல் ஹக்கீம், அகஸ்தியர் முதலிய பாரவான்களின் சாஸ் திரங்கள் முற்றுந் தேர்ந்து அட்டமாசித்திகளையும் உணர்ந்தவர். இவர்கள் ஒரு சுமார் 150-வருஷங்களுக்குமுன் தென்மலையாளம் கோட்டாறு நகரத்தில் வசித்துள்ளவர்கள். இவர்கள் தந்தை பெயர் மலக்கு முதலிய வைத்தியர் இவர்கள் நம் காலத்தில் காலங்கடத் தும் சிலபல வைத்தியர்களைப்போ லுள்ளவர்களல்லர்; அநேக மூலி கை வேர், புல், பூ, முப்பூ, விவரங்களைத் தெரிகிற தற்காக வேண்டி பொதிகை முதலிய மலைகளில் சஞ்சாரஞ் செய்து, தங்கள் சொந்த மாக அநேக சாஸ்திரங்களையும் செய்திருக்கின்றார்கள்.

ஷை சாஸ்திரங்கள் இக்காலத்திலுள்ள சின்ன வைத்தியர்கள் கண்டுங் கேட்டு மிராத அநேக சூட்சம வேலைமானங்கள் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. அவற்றுள் இரசவாத சூத்திரம் என்னும் படலம் ஒன்றிருக்கிறது. அது ஜனங்களின் உள்ளத்தை அப்படியே காந்த கரணம்போல் பிடித்து இழுத்து வைத்திய நுட்பத்தை ஆரா ய்ச்சி செய்யும்படியான நோக்கத்தை உற்பத்தி பண்ணிவிடும். முடி வாகச் சொல்லும்பட்சத்தில் வாவாசி வைத்தியர் என்கிற இந்த மானிடரான உலகவாசிகளாகிய உரோகஸ்தர்களுக்கு ஒரு கற்பக விருக்ஷம்போல் எழுந்து நின்றார்கள். நிற்க,

ஒருபோது திருவனந்தபுரத்து மஹா அரசராகிய ஸ்ரீமத் 4-வது முத்துச்சாமித் தம்பிரான் அவர்களுக்கு பெரிதும் சரீரக்குறைவாகி அநேக இராஜவைத்தியங்களைப்பார்த்தும் தீராமல் ராஜ குடும்பத் தாருக்குள்ளே மிகவும் பயங்கரமான பேச்சுகளும், அழுகுரலும்

உண்டாயிற்று. அந்த சமயம் ராஜசபையில் நின்றும் ஷெ வாவாசி வைத்தியரை அழைக்கப் பல்லக்கு வந்திருந்தது. வைத்தியர் வைத்தியக் கருவிகள் ஒன்றும் எடுக்காமல் சும்மா வெறுங்கையாகவே வந்துவிட்டார்கள். வந்து நாடி நோக்கவும் நாடி விழுந்து சிலேற்பன வேகத்தால் மரண ஜன்னி பரவி சரீரபீதி கொண்டிருப்பதைத் தெரிந்து விரலை பல்லால் கடித்து ஜோப்பிகளைத் தளாவினர்கள் ஒன்றும் மருந்து டப்பிகள் அகப்படவில்லை. இதென்ன விபரீதம் என்று விசனித்து விட்டு அங்கு கிடந்த செம்மண் குவியலில் நின்றும் சமயோசிதமாக ஒருமண் உண்டைசெய்து அதை சற்றுநேரம்வரையிலும் தங்களின் மார்பில் அடக்கிவைத்து அப்பால் எடுத்து கரைபனஞ் செய்து அரசனுக்கு கொடுத்தார்கள், உடனே அரசன் மரண அவஸ்தையில் நின்றும் மீட்சிபெற்று பார்ப்பவர்களெல்லாம் அதிசயிக்கும்படியாய் சுகம்பெற்றெழுந்து சர்வ ஆரோக்கியமானர். அப்பால் அரசன் வைத்தியரவர்களுக்கு பாதார்ச்சனை செய்து மேன்மை பொருந்திய அநேக வெகுமதிகள் கொடுத்தும் அவைகளை அவர்கள் ஒப்புக்கொள்ளாததினலே அவர்களுக்கு அவ்வரசரால் ஷெ கோட்டாறு நகரத்தில் பார்ப்பதற்கு விமரிசையான நல்லதோர் மெத்தை வீடுகட்டிக் கொடுக்கப்பட்டது. இப்பவும் வைத்தியரவர்களின் சந்ததிகள் அதில் வசித்து வருகிறார்கள். இந்த சிறப்பு பொருந்திய மஹானின் அற்புத சரித்திரம் எழுதப்புகுந்தால் எத்தனையோபாரங்கள் வரையிலும் எழுதலாம். அவைகளை இந்த முகவுரையில் காட்டல் இயலாது ஆனபடியால் சுருக்கி முடித்துக்கொண்டேன் என்பதை புத்திமான்கள் அறியவேண்டியது.

இக்கனவானின் செய்யுள்களாகிய வைத்திய சாஸ்திரங்களும் இன்னும் சில நுட்பங்களான நூல்களும் அச்சிலிருக்கின்றன.

கூடிய சீக்கிரத்தில் அச்சிட்டு வெளிவரும். வேண்டியவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

வா. மு. முஹம்மது யூசுபு லெப்பை.

பெருமாள் குளந்தெரு,

கோட்டாறு.

பிஸ்மில்லாஹிர்றகுமா னிர்றஹீம்.

நபியுல்லா

மாளுேடுபேசிய காரணக்கதை.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருநபிபிணையாய்நின்ற செய்யமான்காதைதன்னைப்
பெருகுநற்றமிழாற்பாடப் பிறப்பில்லானிறப்புமில்லான்
அருவமுஞ்சொருபமில்லான் அனைத்தையும்படைத்தேயாளும்
ஒருவனேபெரியதுய்யோன் ஒப்பில்லான்காப்பதாமே.

நூன்முகம்.

(ஆண்டவன் வாழ்த்து.)

மையிருள்வெளியும்வானும் மலைகடல்நரகசொர்க்கம்
வெய்யவனுடனேயிந்து மேதினியுயிர்கள்யாவும்
துய்யநன்னபியின்சோதி தோன்றிடப்படைத்தகோவே
வையகந்தனிலென்பாடல் வழங்கநீதுணைச்செய்வாயே. (க)

வஞ்சமார்குபிர்கள்மாள மணலொருபிடியாவென்றோர்
தஞ்சமென்றிஸுலாமாகித் தருவன்பொற்பதியென்றேற்றோர்
நெஞ்சுநேர்ஹபீபுகாண நிலவினைவரவழைத்தோர்
நஞ்சினையமுதாவுண்ட நபிதமைப்புகலுவோமே. (உ)

சற்குணரிறஸுல்நாகன் தனித்திருமலையிலன்று
பொற்குவளைக்கண்டுஞ்சும் போதினில்வெளிவராமல்
நற்கமலத்தாள்தன்னில் நயப்படவினிதடைத்தோர்
ஹக்குமாம்மறையபூபக் கரைக்கருத்தினிற்கொள்வேனே. (ங)

படியுமந்திரமுமோதும் பனிப்பகைதொழமுன்னாக
விடியுமோவெனக்கண்ணோக்கி மீண்டதைச்செல்லச்செய்தோர்
கொடியவஞ்சமர்ப்புகுந்து குபிரரைக்களமறுத்த
கடியவாளுமறுபாதங் கனவிலுமறந்திடேனே. (ச)

பொன்னகர்முதலாயாவும் போற்றுதற்குடையோரான
முன்னவன்வரவிடுத்த முதுமறைக்கோவைசெய்தோர்
நன்னயரிறஸூலென்பு நலஞ்செறிமருகராஞேர்
மின்ஞெளியுதுமான்பொற்ருள் விரிமலர்சிரமேற்கொள்வாம். (ரு)

வெறுமனக்கசட்டுவேந்தர் வெட்டியேநகரழித்து
அறுமணிபிடித்துவந்து அரசர்பால்சென்றவீரர்
நறுமணம்வீசுமக்க நபிதிருமருகராஞேர்
உறுமலியுபயபாத முளத்தினிலிருத்துவேனே. (சு)

கலியொடுதுவலைமார்க்கம் கணக்கிலாவுயிர்கள்யாவும்
பொலியுநற்றிசையுந்திக்கும் புவனமும்படைத்தேயாளும்
வலியவன்தூதாவந்த முஹம்மதர்மருகராஞேர்
அலிபெறும்புதல்வரான ஹஸன்ஹுஸைன்தமைத்துதிப்பாம்.(எ)

சிந்து.

ஆதிபெரியோனே யெந்நாளு மிருப்போனே
அன்பனே யெங்குந்நிறைந்தோனே தம்பிரானே
சோதியேதுய்யவனே சரியிணை யில்லானே
துஞ்சானே ஊணுண வில்லானே யென்பிரானே (க)

தந்தையிணையில்லாத தானவனே கோனே
தக்கபுவியண்டமு மடங்க லமைத்தோனே
சிந்தையினுதிக்கு முன்ஞகை வறிவோனே
சீமானே செங்கோலுடைய கோமானே நீதானே (உ)

வல்லவனே ராஜதமுடைய வலியோனே
வர்க்கமில்லாத பெரியோனே வகுத்தோனே
கல்லுக்குள்ளிருக்கு மண்டூக மதுதனக்குந்
கர்த்தனேயுண்ணி ரணமுற்று மருள்வோனே (ங)

எண்ணிலடங்காதவனே யேகபெரியோனே
என்றனக்கு முன்னுதவி தந்தருளுவாயே
கண்ணின்றிக் காண்பவனே நானடியேன்றனக்கு
கற்றவர்முன் னுரைபுரிய வித்தை தருவாயே (ச)

வாசமுறுங் கஸ்தூரிமேனி நபிபாதம்
வல்லவனே யென்னுவில் வந்தூதவ வருள்வாய்
பேசும்புகழ்மான்கதையைப் பாட வினையோட
பிரியமுற்ற திவ்யசுத்தசுதமிழுரை தெரிந்தே (ரு)

மோசமற நேசமுடனே யடியேனுவில்
மொழிகள் தவரூமல் மதிதரவேணுமல்லாகு
ஆசுகவி மதுரகவி சித்திர விஸ்தாரம்
அரியதமி ழூருசிபெற வரிசை தருவாயே (சு)

எங்கும்புகழ் மக்கநகர் வாழும் அலிப்புலவர்
இருசரணமென்சிரசி லென்நாளுங் கொண்டேன்
துங்கமிகும் நாவலர்க ளிருசரணந் தன்னைத்
தோத்திரஞ்செய்தேயடியேன்சென்னிதனில்வைத்தேன் (எ)

அவையடக்கம்.

பக்தியுள்ள மான்கதையை நான் சிறியேன்பாடப்
■ாவலர்முன் னுகவென்றன் நாவசைவதெல்லாம்
கத்துகடலோசைக்கு முன்னே குசவன்குண்டு
காதிலலை மோதிசிறு சத்தமிட லொக்கும் (அ)

காரிருண்ட ரூபமொடு கனகமழை பெய்யக்
கண்டுடனெழுந்துபனி நின்றுபெய்வ தொக்கும்
போர்முகமாதங்க மணித்தொனி தனக்குமுன்னே
* புருவமணி நாவசைதல் போலுமென்றன் புன்சொல் (கூ)

பாலில்புகும் நீரைப்பகிராதே கொள்வதுபோல்
பண்புடையோரென்றன் பாடலன்புடனே கொள்வார்
சோலைமலர் பிச்சியிரு வாச்சியொடுநாரும்
சூட்டிடுவார் போலிதனைத் தள்ளாமலேகொள்வார் (க0)

ஆக்கியோனூர்ச் சிறப்பு.

செங்கமலமாதுகுடி கொண்டிருக்கும்கோடை
சீர்பெருகும் மாமறைக ளேதெரியும் நாடு
துங்கமிகும் வானவர்கள் வந்திறங்கும் நாடு
துய்யவனருள்பெறும் தீனேர்பெருகும் நாடு (கக)

வல்லவனருள்பெறும் நபிதமக்குகந்த
வாவாகாஸீம் அப்துர்றஹ்மான் வாழ்ந்திருக்கும்நாடு
நற்புகழ்ஷெய்குகுஞ் ஞாலிமொன்னுதாமும்
நற்றவத்துதித்தமொன்னு முஹம்மதுவாழும்நாடு(கஉ)

---

* புருவம் - குதிரை.

எத்தலம் புகழும்ஷெய்கு நூறன்முதலியார்
என்நாளும் வாழும்நகர் தன்னிலொரு மிஸ்கீன்
குற்றமற்ற மான்கதையை குறுங்கவிகள்செய்தேன்
குதாயருள்பெறும் முஹியித்தீ னிருசரணம்வாழ்த்தி(கங)

அருள்பெருகும் மக்கநகர் அறபுக்கரைவனத்தில்
அன்றுமானுக்குப்பிணை யாகநின்ற கதையை
திருவளரும் கோடைநகர் வாழ்மனுக்கு முதலி
சிறுவனெனும் பாவாகாசீன் செழுங்கவிதைசெய்தே (கச)

கர்த்தனிறசூலும்மத்தோ ரிக்கதையைக்கேட்கக்
காதலுடனே யெவருந் தீதறப்படிக்க
ஒக்கவமைத்தொக்கவர சாண்டபெரியோர் சேர்
உலகுதனிலேபெரிய மக்கவளம்முரைப்பேன்(கரு)

நூல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பாங்கெலாமொருவன்றன்பாற் பதமெனச்சாற்றுவோர்க்கு
நீங்கலாமிபுலீசைத்தான் நிண்ணயக்கலிமாவாலே
வாங்கலாம்நரகைவிட்டு வலுதிருநாமமோதத்
தீங்கெலாம்நீங்குமக்கச் சிறப்பதைவகுத்துச்சொல்வாம். (க)

ஆதவன்விலகும்கஃறபா வதினகமிருந்துவாழும்
பூதம்வாய்திறந்துபேசும் புத்தெல்லாம்கவிழ்ந்துவீழச்
சேதமாய்குபிர்கள்மாளத் தீன்மிகத்தழைத்திட்டோங்க
மாதவநபிபிறந்த மக்கநாட்டியல்புசொல்வாம். (உ)

மக்கமாநகர்ச் சிறப்பு.

சிந்து.

மக்க்நகரந்தனிலே வாழ்மரமுஞ் சோலைகளும்
திக்கெலாம் விளைகரும்புஞ் செந்நெல்விளையும்நிலமும்
ஈத்தமர மிளம்பூவுங்காய் பழத்தோடிலகியிடும்
பூத்ததாமரையிலன்னம் புதுமலர்த்தொட்டிலாடும் (க)

கொடும்புலியும்பசுவும்நீர் குடிக்குமொருதுறையில்
வடுவில்லாத் தெரிவையர்கள் மஞ்சணீராடிடுவார்

குழலுக்ககிற்புகையும் கோரிமலர் சூட்டிடுவார்
அழகுமுகங்குறிக்கண் அஞ்சனமெழுதிடுவார் (உ)

பொன்னின் துகில்தானுடுத்துப்பூட்டிடுவார்பொற்பணிகள்
தன்னியத்தி லிரத்தினக்கச்சு தாக்கியேகளபம்பூசி
அந்தந்தத் திசைகள்தோறும் அவரவர்மாளிகையில்
பந்துகளும் அம்மனையும் கரத்தேந்தியாடிடுவார் (ங)

கஷ்பதுல்லாவுக்குயரம் கதிரோன்விலகிடுமால்
ஆபத்தெல்லாம் நீங்கிவிடும் அந்தத்தலத்தின்பெருமை
வானஞ்சூழ்ந்த வையகத்தில் வலிமையிதுபோலில்லை
ஞானமுள்ள ஆலநபி நலத்தோ டுதித்தநாட்டில் (ச)

நாற்றிசையு மோதலோசை நல்லகலிமாமுழங்கச்
சாற்றுமா மறையோர்மிக்க தக்கஸலவாத்துரைக்க
காவெல்லாந்தலையசைக்குங்கமுகு * பழுக்காய்சொரியும்
மாவெல்லாம் ο வரிகள்பாயும் வருக்கைபழுத்தொழுகும் (ரு)

காடெல்லாங் கற்பகத்தரு கல்லெல்லாம்பதுமராகம்
கோடெல்லாமந்திகள்தாவும் குலைவாழைதேனொழுகும்
ஆறெல்லாங் கயல்குதிக்கும் ஆனவாளைமுத்தெறிக்கும்
தூறெல்லாங் குங்குமப்பூடு துளபங்கரந்தைபிச்சி (சூ)

ஊரெல்லாங்கஸ்தூரிவாடையோதல்சலவாத்தோசைகள்
பாரெல்லாம் பசும்பொன்மணல் பாங்கெல்லாம்புரிசைசூழும்
ஆவணங்கள் வீதியெல்லாம் அணியணிநிலைத்தேரும்
காவணமுஞ் சித்திரமுங் கதிரொழுகும்மூசல்களும் (எ)

பொன்னின்மணிமேடைகளும் பூவைபந்தடிக்கூடமும்
வர்ணமணி மாளிகையும் மாடகூடகோபுரமும்
கிள்ளைவிளையாடுமந்தக் கிளர்ந்தமணிமண்டபத்தில்
வெள்ளைநிலா முற்றங்களும் வெண்மணிச்சிங்காதனமும் (அ)

மஞ்சுத வழுங்கோவில்கள் மடைப்பள்ளிச்சத்திரமும்
பஞ்சவர்ண கந்துகங்கள் பதிந்துகட்டும்பந்திகளும்
நாடகசாலை யிலங்கும் நாவலர்பாடல்சங்கீதம்
பேடைமாமயி லன்னம்போல் பெண்கொடிமார்குரவைமிகும்

---

* பழுக்காய்-பாக்கு. ο வரி-வண்டு.

(கதை.)

இந்தவள முள்ளநாட்டில் இறஸூலிருக்கையிலே
அந்நகரிற் சிறந்த அறபுக்கரைவனத்தில்
அல்லிமலர்பூடுகளும் அந்தருப்பையோடைகளும்
கல்லின்மேற் சுனைபலவும் கடியபுனலாறுகளும் (௧௦)

சிலந்தி பெருங்கோரையும் சிற்றறுகும்மாஞ்சிகளும்
கலந்தபசும் புல்லுகளும் கல்வாழை நற்கரும்பும்
அந்தமுறவேமிகுந்து ஆனைபெருமொட்டகையும்
கந்துகமும் நாவிகளும் கடமான் முயலினமும் (௧௧)

கலையும்பிணைமான்களும் கவரியுமுலாவுமங்கே
வலைதானெடுத்துவேடன் வந்தானோர் தினமதிலே
கோடையால் காடேசுருண்டு குடிபுனலும்புல்லுமற்று
தேடக்கிடையாமலொரு செவ்வியமானச்சமயம் (௧௨)

வேங்கையின் பெருங்குரல்தான்விண்ணிலிடிபோலக்கேட்டு
ஏங்கிமனங்கலங்கி 'இணையும்மறியையும்விட்டு
சலித்துதடம்பிழைத்து தளர்ந்ததைக்கண்டுடனே
பலித்ததுவேட்டையெனவே பழிகாரவேடுவனும் (௧௩)

கண்டதனால்மனமகிழ்ந்து கடிதாய்க்குடில்புகுந்து
கொண்டுவலையும் பாசமும் கொலைக்கத்திகைமழுவும்
அத்திரமுஞ் சிற்றரிவாள் ஆனகுந்தம்சக்கரமும்
தத்தியுடன்கொண்டுவந்து சடுதியிலக்கானதிலே (௧௪)

மாயவலைதன்னையிட்டு வளைந்தானொருநொடியில்
பாயும்புலிபோல்விரைந்து பதறவொதுக்கியதைக்
கட்டிப்பிடித்தானவனும் கயிற்றுவலைக்குள்ளாக
வெட்டிவதை செய்திடவே விலக்குதற்கங்கெவருமிலை (௧௫)

ஐயோவென் றுடல்பதறி அழுதுமிகச்சலித்து
எய்துபெரு மூச்சுவிட்டே யிடரடைந்த மான்பயந்து
பயிரையழித்ததுண்டோ பாவமிகச்செய்ததுண்டோ
உயிர்வதைகள் செய்தவர்க்குஒத்துதவி புரிந்ததுண்டோ (௧௬)

கன்றுக்கிரங்காமல்நானும் கடும்பாவஞ்செய்ததுண்டோ
இன்றுநான் விழித்தப்லன் இதுவோதலைவிதியோ

குத்திரங்கொலைகளவு கொடிதாகச் செய்ததுண்டோ
சத்தியமுரைத்துமாறித் தவறிநடந்ததுண்டோ (கஎ)

கன்றுவழிதேடிமெத்த கதறியழுதிடுமே
என்றுரைத்துக்கன்றிமன மேங்கியேபுலம்பியது
அந்தநல்லவேளையிலே ஆலநபிதாமும்வந்தார்
முந்தவே ஸலாமதனை மூதறிவர்க்கோதியதே (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஓதியஸலாமுக்கேற்ற வுரைசொலிநபியாம்வள்ளல்
ஜாதிதாழ்வேடன் கண்ணிதனிற்பட்டதெதனாலென்ன
காதிலோர்மானும்வேங்கை கடுங்குரல்முழக்கங்கேட்டுப்
பேதையாய்மனங்கலங்கிப் புறப்பட்டேன்திசைபிழைத்து (க)

பிழைத்ததால்கொடியவேடன் பிடித்தென்னைவலையில்கட்டி
இழைத்தனன்றீங்குநீசன் ஏந்தல்நீரென்னைக்காண
குழைத்தழைநுகராக்கன்றுங் கூட்டமுமிணையும்போன
முழைத்தலையவற்றைக்காணேன் முஹம்மதென்றுரைத்ததம்மா.

சிந்து.

உரைத்தமொழிதன்னைகேட்டவுடன்உடையோன்திருநபிமனமிரங்க
பதைத்தபதைப்புகள்தியக்கம்விட்டு பையமானவர்தம்மைநோக்கி
கன்னிமாமயிலாயிருந்த காலிமேயென்றன் கண்மணியே
சென்னிதனில்வீடு தரித்திருந்து ஜிபுரியில்கண்டுகொட்டினரே (க)

மக்கத்தறபியிலொருவனொட்டை மாளிகைதனிலிரவுவந்து
ஒக்கவிடிந்தபின்னிறஸூலே யுமைக்கண்டேஸலாமோதிடவே
விள்ளுவாய்மனத்துள்ளதென்றே மேவிநீருரைசெய்யவது
வள்ளலேயெனைக்கொண்டவர்செய்வகையைக்கேளுமுன்னேயவர்க்கு

தேடுந்திரவியந்தானுமில்லை செய்துண்ணுந்தொழிலேதுமில்லை
நாடுதனில்கூலிவேலைசெய்து நாளுங்களித்தனரவரும்பின்பு
கூலிபொதியெடுத்தென்முதுகில்கொண்டுகொடுத்தந்தகூலிசேர்த்து
சோலிபடவேண்டாமெனநினைத்து சொந்தத்தொழில்செய்தனரே.

மேலுமுடையவனென்றனக்கு விதித்தநாலாறுகன்றுகள்தாம்
தாலமதில்வளர்ந்தேபெருகத் தக்கமுதலுண்டாச்சவர்க்கதனால்
வாழும்படிபலபொதியெடுத்தம்மனிதர் வாணிபக்காரரானார்
நாளுமப்படியிருக்கையிலே நானும்வயதாகத்தம்மவர்பால் (உ)

ஏகனருசேருமிறஸூலேயின் றனைக்கொடுமக்ககடைதனிலே
வேகமுடனறுத்தேதசையை விற்றுமுதல்கொண்டுவாருமென்றார்
என்றுவிசனித்தேசொன்னதுபின் இரஸூலேநீரும்கரத்தைநீட்டி
வென்றியுடனதன்முதுகைத்தொட்டுபிஸ்மிலோதினீரிளம்வயதாய்.

ஆகங்குளிர்ந்ததுபததம்பணிந்து அந்ததலம்விட்டுக்கடந்ததுடன்
வேகமுடன்றேடிஅரபிவர விள்ளுமவர்மொழிவினவிக்கேட்டு
தெள்ளும்புவிக்கரஸெனும்நபியே தேடக்கிடையாத்திரவியமே
தள்ளும்படிவந்தஒட்டகையைச் சடுதியவரோடேபோகவென்றீர்.

அதைக்கண்டறபியிஃதாருடைதாமோவென்றையங்கொண்டிடவே
துதியாயிவ்விடநடந்தவிதஞ் சொல்லென்றொட்டைக்குநீருரைத்தீர்
ஒட்டையவ்வாறேசொல்லக்கேட்டு உள்ளமகிழ்ந்துதானறபியுமே
கெட்டகுபிர்விட்டேனின்றுமுதல்கிருபைகலிமாவைஎனக்கருளும்.

என்றிடவருள்செய்தவரை ஈடேற்றிவைத்தீர்இறஸூலே
வென்றியுடனன்றுநிலவழைத்தீர் வெண்டலைதனைப்பேசவைத்தீர்
தாயைவெறிகொண்டடித்தமகன் தன்கைதனையவனறுத்துவிட
ஆயும்நெறிசேருமிறஸூலேஅன்று அவன்கரம்பொருத்திவிட்டீர்.

ஆலந்தனையமுதாகவுண்ட ஆதிஅருள்தூதர்யிறஸூலே
சீலமுடனென்றன்செய்தியினும்செப்பக்கேளுமென்றுண்டவரே
இசைத்தகடல்சூழும்வையகத்தில் யானும்சிலகாலமலடிருந்து
புதைத்ததிரவியமெடுத்ததுபோல் புவியிலொருகன்றுபெற்றெடுத்தேன்

கூட்டம்பிரிந்திட்டநாளில்லையே குட்டிபிரிந்திட்டநாளில்லையே
காட்டுவேடுவனெனைப்பிடித்துக் கட்டிக்கொலைசெய்யும்நேரமதில்
நாட்டும்பெரும்புகழ்நன்னபியே நல்லதுணையாகநீரும்வந்தீர்
வாட்டம்தவிர்த்தென்னைமீளவிட்டுமறியும்பாலுண்ணஉதவிசெய்வீர்

ஊரிலொருவன்றூ ஞசைவைத்து உமக்குவிருந்திடவேண்டுமென்று
பாரில்மறியைத்தான்பிடித்திட்டவன் பையதக்பீறுசெய்தநேரம்
நேருங்குமரரில்சிறுவன்றன்னை நெடியமூத்தவன் அறுத்துக்கொல்ல
ஆருமறியாமல்அடக்கஞ்செய்து அவனுமைக்கூட்டியுணுமெனநீர்.

உண்ணவிருக்கையில்சிறுவனுண்டோ ஓடிவிரைவினில்வருத்துமென்றீர்
கண்ணைக்கவிழ்ந்தவன்மனையாளுந்தான் கலங்கிதியங்கியேநிற்கநீரும்
நண்ணித்தவஞ்செய்யும்பெண்கொடியே நடுங்கிதயங்குவதேதெனவே
மண்ணில்பதர்தோயாதாண்டவரே மாண்டதென்பிள்ளையென்றுரைக்க

மாண்டதின்றுதானேவென்றுநீர்மறுத்துக்கேட்கவேபெண்கொடி
மீண்டுமுமைநோக்கியாண்டவரே மிக்ககறிவைக்கமறியதனே [யாள்
ஆண்டவென்பதிஅறுத்திடவே அடுத்தேயிருமக்கள்பார்த்திருந்து
தூண்டவப்போதுசிறுவன்றன்னே துடிக்கவதைத்தான்மூத்தவனெ
[ன்றனள்.

நன்ருநன்றெனஅதிசயித்து நாயகம்நீருமங்கிருந்தே
மன்றவிங்கிந்தப்புதுமைதானும் வல்லோனருட்படிவந்ததென்றே
வென்றியுடனந்தபிள்ளைதனே விரைந்துகொடுவாருமெனவுரைத்தீர்
மன்றல்கமழும்நற்பூங்குழலாள் மகனேயெடுத்தேந்திதிருமுன்வைத்
[தாள்.

அந்தநேரத்தில்நன்னபியேநீரும் ஆளும்பெரியோனேதான்ருெழுது
கண்டமிரண்டையுந்தான்பொருத்திக்கரத்தால்தடவினீர்காலளவும்
வந்துபுகுந்துயிர்பரந்திறந்த மைந்தனெழுந்துமைவணங்கினனே
கொந்துசேர்வஞ்சிபூமானும் கொள்கையுடனும்மைபோற்றிநின்று

எங்கள்குடிக்கெல்லாம்நாயகமே யிறசூலேயெங்கள்கண்மணியே
தங்கப்பசும்பொன்னேயாண்டவரேதாண்டிஅறுசேறும்செய்யிதுவே
துங்கப்புலியவிமாதுலரே சூதர்தமைவென்றபெருமாளே
சங்கையளவில்லாசதைகட்டியைத் தரணிதனில்பெண்ணுயெழுப்பி
[னேரே.

அந்தபரிசுபோலெங்களுக்கு அழிந்தசிறுவனேயெழுப்பித்தந்தீர்
சந்தத்திருநபிநாயகமே சமைத்தஅமுதுணுஞ்சிறுவனேடே
என்றுகளபகுங்குமபுயத்தா வினேப்பொன்மலரடிவணங்கிநிற்க
நன்றியுடனமுதருந்திவந்த நபியேநபிகட்குநாயகமே.(கஎ)

வேதப்பொலிவேவிண்ணவர்க்கரசேவிரும்பினேரிடர்தவிர்த்தவரே
ஏதஅடிமைதன்னிடர்தவிக்க இப்போதிரங்குமென்றிறைஞ்சியதே
காக்கும்பெரியோராமிறசூலன்றுகாட்டுவேடனேத்திருகண்ணேக்கி
பார்க்கவப்போதவன்வடிவு பற்றிப்பெருத்தகால்கரம்விரலும்.

ஊடுநரைத்தலேசுருண்டமுடி உடலிற்சிறுகூனுமுயர்ந்தபல்லும்
கூடுபுருவமுஞ்சொறிதேமலும் கோணபார்வையுங்குறுங்கழுத்தும்
மூடித்ததாடியும்பற்கடியும் மூக்குஞ்சிறிதாகச்சிவந்தகண்ணும்
குடித்தமதுவினல்தலேக்கிறுக்கும் கொடுங்கைமுகமெங்குஞ்சோரி
[களும்.

பச்சைமாவுரியுளவிடையும் பசுங்குழைகளேமிகச்சொருகும்
கச்சைவாரிடைக்கட்டுகளும் காடுதாங்கிடுங்கழற்பதமும்

சங்கையுடன்கருங்குறியுடனுந் தாங்கித்தலைவிரிகோலமுமாய்ச்
செங்கைதனில்வில்லுவரிச்சரடும் சேர்ந்தஅம்பறாத்தூணிகொண்டு
கறுத்தவிழிரண்டும்நெருப்பெழவேகடிந்தபார்வையும்முகச்சீறலும்
அறுக்கும்நகப்புலிபோற்சிறந்து அந்தவேடுவன்நின்றனனே[தோர்
குன்றுதனையன்றுவரவழைத்தோர் கொடியசுரந்தியையோடவைத்
மன்றுதனில்பாதம்தோயாதவர் மானைவிடுவிக்கவேண்டுமென்று
வேடன்றனைநபிதாமழைத்து விட்டுவிடுமானைமறிபாலுண்ண
ஆடுபுயனேயென்றினிதுரைக்க அடவிமானபியாரைநோக்கி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேடனுங்கொடியபாவி வெறும்வலித்தறுகண்ணாளன்
காடுவாழ்கொடியநீசன் கடுங்குபிராளன்வஞ்சன்
ஆடகப்புயரேயும்சொல் லவன்செவிக்கேறுமோவம்
மூடனேதறிவானெங்கள் முஹம்மதேயின்னுங்கேளும். (க)

கொடும்புலிநகம்போற்கையன் கொலைசெய்யஅஞ்சாநெஞ்சன்
கடுஞ்சிறைக்கடவாக்காலன் ஹக்கனையறியாக்கண்ணன்
தொடுவலைப்படுத்தியென்னைச் சுருட்டியேகட்டிவைத்தான்
படுதலையறியானென்று பகர்ந்ததப்போதுவேடன். (உ)

சிந்து.

பண்டுவைத்ததிரவியத்தை கண்டெடுத்தகதைபோல்
பையவலைப்பட்டமானை விட்டுவிடுவாருண்டோ (க)

உண்டிருந்தஅமுதுதன்னை யுதைத்துதள்ளிவிட்டு
ஊருக்குள்ளேபிச்சைவாங்கப் போவார்களுமுண்டோ (உ)

கானகத்தில்நானுஞ்சில காலமிதைக்கண்டு
கண்ணிவைத்தும்பட்டதில்லை யின்றுபட்டதென்றான் (ங)

ஞானமுள்ள ஆலநபி வேடன்சொல்லைக்கேட்டு
நலிமொழிகள்பேசவேண்டாம் விட்டுவிடுமானை (ச)

விட்டுவிடுமானதுவுங் கன்றுக்கமுதூட்டி
மீளவருமென்றனரப்போது வேடன்றானும் (ரு)

விட்டுவிடில்மானதுவும் மீளவருமென்றீர்
வேடனும்வெறுங்கைவீண னாகவேணுமென்றோ (சு)

இந்தவனமானதிலே யெங்கள்குலவேடரில்நான்
ஏழையென்றறிந்தீரு மென்னைவிடச்சொன்னீர் (எ)

அந்தநாய் தொட்டிதுவரையு மாண்டுவந்தகாட்டில்
அகப்படும்மிருகம்விடச் சொன்னவர்களுண்டோ (அ)
வேடுவர்குலத்துக்கிது வேதொழிலேயல்லால்
வேறுதொழிலில்லையென் றுநீர் விலகிப்போகவேண்டும் (கூ)
காட்டில்வலைப்பட்டமானை விட்டுவிடென்றால்நான்
கானவனுமேதுதொழிற் செய்துண்டுஜீவிப்பேன் (க0)
என்றவிடமுரைத்திடவே யேகன்நபிதாமும்
எவ்வுயிர்க்கும்புசிப்பீய விறையுண்டென்றார் (கக)
மன்றல்கமழும்புயரே மானதையான்விட்டால்
மறுத்துவருமோவெனவே வனசரனுங்கேட்டான் (கஉ)
கானவனே மானதுவுங் கன்றுக்கமுதூட்டி
கடுகவருமதற்குப்பிணை நானேயென்றார்நபியும் (கங)
தேனனசொற்கேட்டுவேடன் முஹம்மதுர்றசூலே
திரும்பமான்வராவிடில்நா னும்மைவிடேனென்றான் (கச)
அந்தமொழிகேட்டுமானு மெங்கள்நயினாரே
எழுந்தருளுமரசேயும்மைப் புலையனறிவானோ (கரு)
நன்றியுள்ளநாயகநீ ரின்றுபிணைநிற்க
நானடியேன்செய்தபிழை தீருவதுமுண்டோ (கசு)
இப்புவியிலென்னபாவஞ் செய்துபிறந்தேனோ
இன்றுமைப்பிணைகொடுத்துப் போகவிதியுண்டோ (கஎ)
நட்பறியாவேடன்வலைக் குட்பட்டேனேயின்று
நன்னபியேயென்விதிபோ மென்னநபிதாமும் (கஅ)
கானவனைப்பிடித்துக் கடுங்கொலைசெய்நேரம்
கண்டுவிட்டுபோதல்விதி யன்றெனமான்றானும் (ககூ)
தீன்நபியேயெங்கள் நயினாரேயிறசூலே
திருமுகத்தைக்கண்டவர்க்குத் தீவினைபோமென்ன (உ0)
மன்னவன்திருநபியும் மான்முகத்தைப்பார்க்க
மானுமேநபிமுகத்தை மாறாதேபார்க்க (உக)
என்னகாரணமோவிது வென்றுவேடன்நபியை
இசைந்துபிணைநிற்கவென மானதையும்விட்டான் (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விட்டமானிறசூல்தம்மை மிகுபரிவுடனேநோக்கி
இட்டமாத்தனியேனுக்கா யின்றிவன்பிணையிலானீர்

திட்டமாயமுதையூட்டித் திரும்பிவந்துமதுபாதந்
தொட்டுயான்வணங்குமாறு துஆவெனக்கியவேண்டும். (க)

என்றுரைசெய்யவெல்லா மியல்நபியிறசூல்கேட்டு
வென்றியுஞ்சுவனவாழ்வும் மேலவன்றருவானென்றார்
குன்றியமனங்குளிர்ந்து குட்டியினிடமதாகச்
சென்றிடநினைத்துமானும் திரும்பியேநடந்ததன்றே. (உ)

கப்பல்பாட்டு.

விட்டபின்மானும் விரைந்தோடிச்சென்று, மேலானகுண்டு குளமுங்கடந்து, வட்டப்பரிக்காடு தன்னையும்விட்டு, வாகான தில்லை வனமுங்கடந்து, பட்டக்கரிக்காடு தன்னையும்விட்டு, பாங்கானசந்தனக் காவுங்கடந்து, மட்டற்றயானைத் திரள்களும்விட்டு, வர்ணப்பரிவாழும் வனமுங்கடந்து. (க)

வெண்மணற்பாலை நிலத்தையும்விட்டு, வீறுனஐவர் வனமுங் கடந்து, தண்ணீரில்லாக் கானகத்தையும்விட்டு, தாமரைப்பூக் குளந் தானுங்கடந்து, செந்நாயுமோனுயுந் திரளிடம்விட்டுச், சிங் காரச்செண்பகத் தோப்புங்கடந்து, சன்னியாசிபாறைக ளோடை யும்விட்டு, தண்ணீரோடுங்கான் யாறுங்கடந்து. (உ)

வேதாளம்வாழு மிடங்களும்விட்டு, வீறுனபூதக் கணமுங் கடந்து, பாதாளக்கோபத் தலத்தையும்விட்டு, பாயும்வரிசிலந் தானுங்கடந்து, யேலக்குறிஞ்சி நிலத்தையும்விட்டு, ஏகாந்த வெட்ட வெளியுங்கடந்து, காலிகள்முல்லை நிலத்தையும்விட்டுக், காக்குந்தினைப்புனந் தானுங்கடந்து. (ங)

தேன்பொழிற்சோலை வனத்தையும்விட்டுத், தேவாங்குயூகத் திரள்களுங்கடந்து, கானக்குறவர் நிலத்தையும்விட்டு, கருஞ்சூரை வள்ளிசேர் காடுங்கடந்து, சிக்குத்தவிர்த்தென்னைப் போகவிட் டோரே, தீன்தீன்முஹம்மதென் றேசொல்லிக்கொண்டு, திக்குத் திசையு மறிந்தேகடந்து, தீன்தீன்முஹம்மதென் றேசொல்லிக் கொண்டு. (ச)

வேகமுடனிவை யெல்லாங்கடந்து, மேலானநபிதஞ்ச முண்டு நமக்கு, பாகம்பிரியாத பாதையிலேகப், பாங்கானதுணையவர் தாமேயென்றுன்னி, சந்திரனுட்பட்ட சோலையும்விட்டுத், தாண்டி டுமந்தக் குளமுங்கடந்து, அந்திரபன்னகந் தம்மையும்விட்டு, அன் னையாந்தன்னை நினைகுட்டியெண்ணி. (ரு)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சென்றிவ்வாறிடங்களெங்குஞ் செறிந்திடுந்தில்லைவன்னி
குன்றிடத்தகில்மாஞாழல் குருக்கத்தியெட்டிகோங்கு
மன்றல்சேர்சிறியபூடு வளநிழலில்லாக்காடு
தின்றிடஇரையுங்காணாத் திருக்கள்ளிநிறைந்தபாலை. (க)

மட்டில்லாவனமும்நீண்ட மலைகளுஞ்சுனையுமாறுந்
துட்டவெம்புலியும்பாம்புந் துரத்திடுஞ்செந்நாய்தானும்
சட்டமாவிரைவிலோடிச் சடுதியில்தாண்டித்தாண்டி
சிட்டெனப்பறந்தேயன்பாய்ச் சேர்ந்திட்டதினத்தினோடே. (உ)

சிந்து.

சென்றுதானினங்களையுஞ் சேரக்கண்டுமானதுவும்
கன்றுக்கருகாகச்சென்று கடுகவமுதுண்ணணவே (க)
தத்திடுமக்குட்டிவரத் தாமதமேன்தாயெனமான்
புத்தியுள்ளவென்மறியே புதுமையிலையெனமறியும் (உ)
தொண்டைகட்டிவிழியுமிகச் சேர்ந்ததென்னவென்றிடமான்
சண்டமாருதமென்னையுந் தள்ளிவந்ததெனமறியும் (ங)
பொன்னிறைந்தமேனியெல்லாம் புழுதியுற்றதென்னெனமான்
இன்னலுற்றகாற்றினால்வந் தெய்தியதெனமறியும் (ச)
வாக்குத்தடுமாறுகிறாய் வந்தவகைசொல்லாவிடில்
ஊக்கமுடன்தாயேநானும் உண்ணேனமுதென்றிடமான் (ரு)
பிள்ளையிடம்தள்ளைகள்ளம் பேசுவதுந்தான்முறையோ
உள்ளபடிசொல்லுகிறேன் உற்றுகந்துகேள்மறியே (சு)
காட்டிலேநம்மினத்தோடே கடியபசியாறும்நேரம்
வேட்டைப்புலிசத்தங்கேட்டு விரைந்தோடித்திசைபிழைத்து (எ)
இனங்களொருதிசைபோக யானுமொருதிசையேகி
மனங்கலங்கிவனங்களிலே மண்ணதிரவோடினேனே (அ)
மண்ணதிரவிண்ணதிர மாறிழுக்கவோடியோடி
எண்ணளவில்லாதவன மெங்குந்திசைபிழைத்துக் (கூ)
காலயர்ந்துமூச்செறிந்து கண்மருண்டுமிகச்சோர்ந்து
மேனுலைந்துநாவறண்டு வேர்வையுடனேதளர்ந்து (க0)
கிடந்தேனொருதலத்தில் கிருபையற்றவேடுவனும்
இடைஞ்சல்வலைக்குட்படுத்தி யென்னைப்பிடித்தானப்போது (கக)
ஆலநபிதாமும்வந்தா ரந்தநல்லவேளையிலே
சீலமுடனேஸலாமுஞ் செப்பினேனவர்க்குநானும் (உக)

கானிலெனக்கவர்பிணையாய்க் கரியவேடனிடமுரைத்து
ஊனமில்லாமல்விடுக்க ஓடிவந்தேனெனமறியும் (கங)

புவியிலிதுதான்முறையோ புத்தியுள்ளோர்செய்வார்களோ
நபியைப்பிணைகொடுத்து நடந்துவரநீதமுண்டோ (கச)

வானமழிந்தாலுமென்ன வார்ந்தவெள்ளந்தூர்ந்தாலென்ன
ஊனுடலழிந்தாலென்ன ஒவ்வாவிதுசெய்யலாமோ (கரு)

என்றுரைக்கமானதுவு மிசைந்தகுட்டிதன்னைநோக்கி
வென்றியுள்ளவென்மறியே விரைந்தமுதுபருகிடுவாய் (கசு)

அந்தத்தலஞ்சென்றிடுவேன் அவசரமாயெனமறியும்
உன்றனமுதென்றனக்கு உண்ணல்ஹறாமென்றதுவே (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மறியுரைத்திடவேகேட்டு மான்வயிறெரிந்துசென்னி
வெறியுறக்கண்மருண்டு வியர்த்துவெண்ணுரையும்வாயில்
பறியமூச்சேங்கியேங்கிப் பதறியேமீண்டுமங்குக்
குறியுடனெழுந்தடுத்தே குட்டிபாலுண்ணென்றோத. (க)

உண்டிடஹறாமுரைத்து உறுதியாய்த்தாயைநோக்கி
மண்டலம்போற்றுமக்க நபிபிணைமாற்றுவிட்டால்
விண்டலம்புவியோடெல்லாம் விதித்தவனணையுண்பால்
கொண்டிடேனென்றதங்குக் குனிந்துபுல்கடியாக்குட்டி. (உ)

கட்டளைக்கலிப்பா.

குட்டிதானுமமுதைஹறாமிட கும்பிஅக்கினிபோலேகொதித்திட, மட்டில்லாதபெருமூச்செறிந்துமான் மன்னராலநபியிடம்செல்லவே, போகும்வேளையிலேமறிதாயோடேபோய்விடாதென்னைக்கூட்டிப்போவென்னவே, ஆகுமென்றுமறிதனைக்கூட்டிமான் அத்தலம்விட்டகலுஞ்சமயத்தில். (க)

உற்றமானினமொக்கச்செறுத்துக்கொண் டோடிடாதென்றிணையும்மறித்துமே, பெற்றகன்றுடன்நீயும்புறப்பட்டுப் போகுங்காரியம்நன்றன்றுநன்றன்று, கண்ணிவிட்டுக்கடந்துவந்தும்மினிக் கானவனிடஞ்செல்லாதேயென்னமான், மண்ணினில்பாதந்தோயா நபிப்பிணை மாற்றியேவருவேனென்னவேயிணை. (உ)

மானிடவன்மறுத்துவிடுவது மண்டலத்தினிற்கேட்டதுமில்லையே, ஈனமற்றகரும்வேடன்கிட்டநீ இன்றுபோகவேண்டாமென

மானுமே, இன்றுபோகாவிடிலவனென்னையு மேற்றஆலநபிதமை யும்விடான், என்றிடவிணைசென்றுமேநன்னபி இயம்புங்கட்டளைக் குட்படுவாயென. (௩)

செல்லுகின்றவனமுங்கடந்துமான் சென்றுநன்னபிபக்கலில் சேர்ந்ததே, கல்லும்புல்லும்பொரிந்திடுங்காடுபோய் காட்சிபெற்ற நபிபக்கல்சேர்ந்ததே, நாடியேயதுசேர்ந்தபின்னெஞ்சிலே நன்மை யேகுதுகலங்கொண்டுமே, தேடியோடித்திருநபிமுன்பிலே சென் றுமான்மறியும்ஸலாமோதவே. (௪)

அத்தைக்கேட்டுமுஹம்மதுநன்னபி சொற்குப்பதிற்சொல்ல மானதும், முத்திலைமைக்கப்பட்டமுஹம்மதே முலையுண்ணவில் லைகுட்டிஹறுமிட்டு, பற்போடாப்பசும்புற்கடியாக்குட்டி பாலன் பட்டினியென்றிடநன்னபி, வெற்படர்ந்தகருவேடன்விட்டிட மேல வன்கிருபைசெய்வானென்றனர். (௫)

பார்த்துநின்றகருவேடனஞ்சியே பாரிலிந்தப்புதுமைகாணே மென,தோத்திரஞ்செய்திறசூல்திருப்பாதந் தொழாவிடிற்கதியில்லை யென்றெண்ணியே, போகவிட்டுமான்போனதும்வந்ததும் புவியி லெப்போதுமேநடந்ததிலை, நாகஞ்சாகத்தலையறிந்தோர்நபி நல்ல நீதிமுறைப்படியாமிது. (௬)

ஞானமுற்றநபிக்கிமான்கொள்வது நல்லவேளையிதுபோலுமி ல்லையே, ஈனமற்றிடுமென்றவரைநோக்கி ஹக்கனோடுரைசெய்த முஹம்மதே, செம்பொற்பாதத்திற்சேரஅடியனைத் திருத்தியேகலி மாவீயுமென்றனன், அன்புற்றகலிமாவைநபிசொல்லி அவன்கேட் டுமான்கொண்டுதெளிந்தபின். (௭)

செய்யமானைத்திருக்கண்ணால்நோக்கியே ஜென்னத்துள்ளநபி யவர்அன்புடன், வையகந்தனில்மானினந்தன்னிலே வாய்மையும் நெறியுள்ளதும்நீயென, ஆண்டவனருள்சேரும்முஹம்மது யானு முங்களடைக்கலமென்னமான், வேண்டுங்காரியமுன்மனதின்படி மேலவன்றருவானென்றவர்சொன்னார். (௮)

அந்தக்கற்பனைக்குள்ளாகிமானுமே அல்ஹம்துலில்லாகியெ ன்றுரைத்திட, இந்தநேரத்தில்நீதான்சடுதியில் இளங்கன்றுக்கமு தூட்டிடென்றார்நபி, என்றவாசகங்கேட்டுஸலாஞ்சொல்லி யேகி மானதுகுட்டியிடத்திலே, நின்றிடும்பிணைமாற்றினர்நபி நீயுமென் றனமுதுண்ணுவாயென. (௯)

உண்ணக்கற்பனைவந்ததெனமறி யுற்றதாயின்முகம்நோக்கிய ன்புடன், விண்ணில்மேகக்குடையுடையோர்நபி மீளவிட்டனர்நம்

முயிர்தன்னையே, என்றுதேகம்புளகித்திறையோனை யெல்லாமுன் செயலன்றிவேறில்லையென, கன்றுரைத்துகடும்பசியாறவே காலை யூன்றி * வரிநெளித்தேசென்று. (க0)

வாலைத்துவலஞ்சுற்றித்துள்ளியே மாசில்லாநபிதம்மையும்வாழ்த்தியே, பால்குடித்திடக்கன்றைமான்நக்கிற்று பாலனும்பசியாறிமுடிந்ததே. (கக)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கன்றுபாலமுதையுண்டு கடும்பசிதீர்ந்துதீமை
வென்றுநற்கலிமாவீந்து வேடனையிசுலாமாக்கி
இன்றுநம்பிறசூலுல்லா ஏற்றுநம்முயிரைக்காத்து
மன்றினில்வரவிடுத்தார் வல்லவனருளாலென்றே. (க)

வல்லவன்கிருபைகொண்டம் மறியுரைத்திடவேமானும்
தொல்லுலகதனில்நம்மை துய்யவனமைத்தபாங்கால்
புல்லுநீர்புசிக்கவென்றே புனத்தில்விட்டாரென்றோத
நல்லபொற்பதிவாள்வேடன் நபிதமக்கீமான்கொண்டு. (உ)

சிந்து.

ஈமான்கொண்டுவேடன் இஸ்லாம்நெறிதரித்தே
இந்தமார்க்கத்தில்கிளைகோத்திர மெல்லாம்வரவிடுத்தே (க)
சீமான்நபிநயினாருடைத் திருவாக்கினைமதித்தே
தீங்கானசொல்குபிரோடவே திருமாமறைதரித்தான் (உ)
காடுதனைவிட்டுவேடன் கடுநடையாய்நடந்து
ஹபீபிறசூல்பிறந்தமக்க நாடுதனிற்சென்று (ங)
ஆடைசெம்பொன்ஸதகாச்செய்து அநேகமுதலளித்து
அரியகஃபாதனையு மவன்பிரதக்கணம்வந்து (ச)
சோதிதிருநாமமோதி தொழுது துஆவிரந்து
துய்யநபிபறக்கத்தினால் சுவர்க்கப்பதியாகி (ரு)
சாதிமாமறையிலானகுறைஷி மார்கள்தமைப்போல்
தக்வாசெய்யும்முக்கியத்தால் ஷபா அத்துடன்நலவாய் (சா)
வட்டமிட்டமுகமதுதான் வனசமலர்போலே
வண்மையுள்ளநுதலதுதான் வளைந்தவிளம்பிறைபோல் (எ)
கட்டழகுமுயர்நடையும் கனிந்தவிதழ்வயிறும்
கண்ணதுமாவடுநிகரக் கமுகதுபோற்கழுத்தும் (அ)

---

* வரி-வடிவு.

பங்கயமாமிருகரமும் பருவிரல்சேர்காலும்
பசும்பொன்னழகாகுமேனி நிலவெயிறுமாக (கூ)
துங்கமிகும்நபியிறசூல் துஆபறக்கத்தாலே
துய்யமக்கந்தனிலேபெண்டு பிள்ளைகளோடவனும் (க0)
கஃபத்துல்லாதனக்குவடக் காகவொருவெளியில்
கட்டுடையவொருமாளிகை திட்டமுடனமைத்து (கக)
சீவக்கொலையானபாவந்தீர அன்னக்கொடையும்
செம்பொன்னேடுடையாடையுஞ் சேரகைறுகொடுத்து (கஉ)
அன்பியாக்களவுலியாக்கள் ஷெய்குசெய்யிதுமார்க்கு
அதிகத்தங்கம்ஹதியாவீந்து அவர்கள்துஆவாங்கி (கங)
சோதிதிருநாமமோதித் தொழுதுதுஆவிரந்து
துய்யநபிபறக்கத்தாலே சொர்க்கவாசியாக (கச)
கும்பரும்வான்பாலுங் கொத்துமணிவிளக்கும்
குறையாதநிறைமரக்கால் கொம்பனையாளெடுக்க (கரு)
மாலைசென்றுகாலைபஜறில் மனுவிழிக்குமுதலில்
மணிச்சிறகைஅடித்துக்கோழி நெளித்துக்கூவுமுன்னே (கசா)
கோலவர்ணமாளிகையில் குடிபுகுந்தேயவர்கள்
குற்றமறவாழ்ந்திருந்தா ரெத்தலமும்புகழ (கஎ)

(வாழ்த்து.)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எத்தலம்புகழுமக்க வியல்நபிபறக்கத்தாலே
சொற்றமிழ்க்கவிதைசெய்தேன் சுற்றத்தார்பக்கத்தோர்க்கும்
குற்றமத்தனையுந்தீர்த்து குதாயேநீநீனேர்க்கெல்லாம்
அத்தனேயுதவிசெய்வாய் ஹக்கனேகாவல்தானே. (க)
காவலாளுன்னையன்றிக் காணவேறியாருமுண்டோ
நாவெல்லாம்போற்றுமக்கம் பிறந்திடும்நபிஷபாஅத்தில்
பர்வங்கள்தமையுந்தீர்த்துப் பலன்பெறஅடியேனுக்கு
கோவைநீயருளிச்செய்வாய் குறையன்றிநிறையுள்ளோனே. (உ)
நிறையுள்ளானெங்குமொன்றாய் நிரம்பியகுதாயேசோதி
மறுஹபாதம்பிரானே மாசில்லாமணியேகுன்றா
நறைகமழ்நகரமக்க நபிஷபாஅத்தடியேனுக்கு
குறையில்லாதருளிச்செய்வாய் கொற்றவாமுற்றுந்தானே, (ங)

முற்றுப்பெற்றது.

176081

செவ்வல்மாநகரம்,

எம். ஏ. நெயினுமுகம்மதுப் பாவலர்பாடிய,

றசூலுல்லாவின் மேன்மையான

மவ்லூதுப் பதம்.

---:*:---

இராகம்-ஹிஸ்துஸ்தான்.

பல்லவி.

சந்த்ரோதயஜனன மணிவடிவாய்
நபிபிறந்தார் நபிபிறந்தார் நபிபிறந்தாரே.

அநு-சரணங்கள்.

நந்தனவனஞ்சூழ் நகர்மக்காவில்
நாதாந்தத்தேனமிர் தக்கஃப்பாவில்
நவநிதக்குருத்திரு முஹம்மதுநபிபிறந்தார்
நபிபிறந்தார் நபிபிறந்தாரே. (சந்)

சாவாவெனுங்கடல் வற்றிவறண்டிட
சேருவான்கோட்டை யுடைந்தேஉருண்டிட
இப்லீசின்சிங்காசன மன்றிடிந்திட
நபிபிறந்தார் நபிபிறந்தார் நபிபிறந்தாரே. (சந்)

சிரசிற்கெண்ணெயிட்டு நேத்ரசுருமாவிட்டு
தீன்சடங்காகிய திவ்யசுன்னத்திட்டு
ஜம்றத்துல்லுஸ்தா வெனுந்திருஸ்தலத்தில்
நபிபிறந்தார் நபிபிறந்தார் நபிபிறந்தாரே. (சந்)

நெற்குநரகங்கள் ஏழுமடைக்கச்
சொர்க்கலோகங்களெல்லா மலங்கரிக்க
அறுஷேமுஅல்லாவை ஆதிசிங்காரிக்க
நபிபிறந்தார் நபிபிறந்தார் நபிபிறந்தாரே. (சந்)

அஞ்ஞானமாமிரு ளோடியொளிக்கவே
ஆயிரஞ்ஜோதி செஞ்சூரியன்போலவே
மெய்ஞ்ஞானமோட்ச விளக்கதுகைக்கொண்டு
நபிபிறந்தார் நபிபிறந்தார் நபிபிறந்தாரே. (சந்)

மயிலாடுஞ்சோலை மதினாவின்ராஜர்
குயிலாமினாவின் குழந்தைப்ரகாசர்
நெயினான்முஹம்மது நித்யஞ்சொல்நேசர்
நபிபிறந்தார் நபிபிறந்தார் நபிபிறந்தாரே. (சந்)

முற்றிற்று.

பிஸ்மில்லாஹிர்றகுமா னிர்றஹீம்.

நபியுல்லா முஃஜிஸாத்துமாலை.

—— :*: ——

கண்ணிகள்.

மக்கம்தனில்பிறந்து வாகாய்வளர்ந்தெழுந்து
சக்கறவேநாலுபத்தில் சங்கைபட்டம்வந்ததுகாண் (க)

பின்புஅசருண்டு பெருமைமக்கத்தில்லிருந்தார்
அன்பாய்மதீனம்தன்னில் அசற்மூன்றுஆண்டிருந்தார் (உ)

நாற்பதுஆமில் நெயினார்முஹம்மதர்க்கு
கூற்பாய்நபிப்பட்டந்தான் குணமாகவந்ததுகாண் (ங)

திங்கட்கிழமை சிறப்பானறமலானில்
மங்காதமக்கந்தனில் வந்ததுகாண்தூதுப்பட்டம் (ச)

தூதர்ஜபுறயில்தான் துய்யநபியளவில்
ஆதிமுதற்கொண்டுவந்தார் ஆனசூறத்துஹலகை (ரு)

பின்புமுஸம்மிலெனும் பேருடையசூறதுதான்
அன்பாயிறங்கிற்றுகாண் அண்ணல்முஹம்மதர்க்கு (சு)

அச்சப்படுத்தி அறிவியுமென்றேவியபின்
உற்சாகம்மாயழைத்தார் ஒருவன்வணக்கத்திற்கு (எ)

காதிபென்றும்சாஹிறென்றும் கருத்துடையஷாயிறென்றும்
ஆதிநபியை அதபுகெடபேசுவார்கள் (அ)

ஷைபான்உதபாவும் ஷெய்த்தான்அபூஜகிலும்
ஐபானபேச்சாக அஹ்மதரைபேசுவார்கள் (கூ)

சாகாப்பெரியோன் சடுதியிவர்கள்தம்மை
ஆகாபலாயா லழித்தானிவர்பொருட்டால் (க0)

அவ்வல்இசுலாமானு ரிணங்கிக்கதீஜதுதான்
செவ்வாகபின்புவந்தார் செய்குஅபூபக்கரும் (கக)

அலியும்உதுமானும் ஆனதல்ஹாஸஃதும்
அலையாதமார்க்கத்துக்கு அபூபக்கர்க்குபின்வந்தனர்கள் (கஉ)

பொன்னுலெவில்விலத்து போட்டுவாள்கைபோட்டு
மன்னர்நபியை வதைக்கஉமறெழுந்தார் (கங)

எழுந்தேகிப்போகையிலே யிஷபகலிமாவுரையை
அழுத்தமாய்க்கேட்டவுடன் அஹ்மதுபால்தீனில்வந்தார் (கச)

மாட்டின்கலிமாவை வாகாயுமர்கேட்டு
தேட்டமாய்தீன்வழியில் துய்யநபிபக்கல்வந்தார் (கரு)
உமறிபுனுகத்தாபு ஒருதீனில்வந்தளவில்
கமறிதிகைத்தார்கள் காபிற்குலங்களெல்லாம் (கசா)
சிறியதகப்பர் சிறப்பானஹம்ஸதுதான்
அறியஉமறுக்குமுன் அன்பாகதீனில்வந்தார் (கஎ)
புரூக்குபரியேறி வீறுயிறையோனைத்
திறமாகக்காட்சிசெய்து திரும்பினரோரிரவில் (கஅ)
மக்கந்தனிலுள்ளவர்க்கு வள்ளல்நபியிறசூல்
சக்கறவேசொன்னபின்பு சந்தாபமாய்த்தகைத்தார் (ககூ)
மிக்கஅபூபக்கரும் வீறுனதீனவரும்
ஹக்கெனவேஈமான் கருத்தாகக்கொண்டனர்கள் (உ0)
எதுரிபெனுமூரில் இருமூன்றுபேர்நபிக்கு
மதுரமுள்ளமக்கந்தனில் வந்தீமான்கொண்டனர்கள் (உக)
எதுரிபெனும்பட்டணத்தி லிசுலாம்பரந்தபின்பு
மதிபோல்முஹம்மதனர் மக்கம்விட்டேகினர்காண் (உஉ)
மதினாவெனும்பதிக்கு வள்ளலெழுந்தேறியபின்
அதிகஇசுலாமில் அவரவர்கள்வந்தனர்கள் (உங)
பின்புபடைகூடிப் பேரானமக்கந்தனில்
அன்பாகவந்து அஹ்மதுர்றசூல்பிடித்தார் (உச)
மறுகால்மதீனத்துக்கு வள்ளலெழுந்தேறி
திறமானசேனைபடைத் தேசந்தனிலனுப்பிவைத்தார் (உரு)
புரிசைகளுங்கோட்டைகளும் பூங்காவனத்தோப்பும்
வரிசைமிகுதியுள்ள பலதுகளைப்பிடித்தனர்கள் (உசா)
பிலமுடையபேர்களென்ன பெரியோன்குறுஆன்மொழியில்
நவபானயார்கள்தம்மை நாயன்புகழ்ச்சிசெய்தான் (உஎ)
அபூபக்கரும்உமறும் அண்ணல்உதுமானலியும்
சவுறமுள்ளயார்களெல்லாம் சங்கையுள்ளபேரவர்காண் (உஅ)
திட்டாந்தரங்கள்கொண்டு தீன்வழியில்வந்தவர்கள்
மட்டிலடங்காது வாயால்துலக்கிறது (உகூ)
மங்காமதிப்பிளவை மண்ணில்வரச்சொன்னவர்க்கு
எங்கும் நடுங்கு மிவர்கீர்த்திகேட்டளவில் (ங0)

உடும்புமுதலொட்டகையும் உன்னிஸலாம்சொன்னவர்க்கு
நடுங்கும்புவியேழும் நாயனருளாலே (நுக)

மாட்டினமும்ஆட்டினமும் வரிசைசுஜூதிட்டவர்க்கு
கூட்டங்களெல்லாம் குலையுங்கோமானிவரடுத்தால் (நுஉ)

கல்லும்மரமுங் கருதிஸலாம்சொன்னவர்க்கு
கொல்லுங்கரடிபுலி குணமாகத்தாள்பணியும் (நுங)

ஆட்டைஹயாத்தாக்கிவைத்த அண்ணல்முஹம்மதர்க்கு
காட்டிலுள்ளமான்மரைகள் கனமாய்ஸலாமுரைக்கும் (நுச)

கைபறெனும்பதியில் கறுத்தவுறிமாறுடனே
றைபில்லாபேசியர்க்கு யெல்லாமடிபணியும் (நுரு)

பொழுதைத்திருப்புவித்த பெருமாள்முஹம்மதர்க்கு
பழுதறவேயெல்லாரும் பாங்காய்ப்பணிந்துநிற்பார் (நுசு)

துப்பியுமிழ்ந்து துலக்கமில்லாக்கண்விழியை
செப்பமுள்ளகண்ணுக்கும் ஸூல்தான்முஹம்மதனூர் (நுஎ)

கழன்றவிழிஜனை கையால்தரிப்படுத்தி
அழுத்தமுள்ளகண்ணுக்கும் அஹ்மதுர்றசூலிவர்காண் (நுஅ)

பட்டமரங்கள்தம்மை பச்சைமரமாக்கிவைக்குங்
குற்றங்குறைதீர்க்கவந்த கோஜாமுஹம்மதர்காண் (நுகூ)

செத்தசெய்துக்காகத் துலக்கமாய்சாட்சிசொன்ன
புத்தைவிழப்பண்ணிவைத்த புறுகான்முஹம்மதர்காண் (சo)

நட்டகுத்தியீத்தமரம் பள்ளிதனில்அலற
கட்டியணைத்தகருணை முஹம்மதர்காண் (சக)

உப்புக்கிணற்றில் உமிழ்ந்தமுதமாக்கிவைத்தோர்
செப்புரையில்லாஊமைசெப்ப துஆ விரந்தோர் (சஉ)

கெஞ்சிதுஆவிரந்தார் கிருபைமுஹம்மதனூர்
அஞ்சிபடிவாசல் ஆமீன்உரைத்ததுகாண் (சங)

ஒணய்ஸலாமுரைத்த உண்மைநெயினர்தமக்கு
ஆனைகரடிபுலி யாசரித்துதாள்பணியும் (சச)

மானின்பிணையாகநின்ற வள்ளல்அஹ்மதனூர்
பூனைக்கிரங்கி புனல்சாய்த்தபுண்ணியர்காண் (சரு)

உம்முஅய்முன்னரசி யுருநபிதன்னீர்பவுலே
அம்மிகுடித்து அழகானபெண்ணுனர் (௪௬)

நிலவைப்பிளந்தழைத்தார் நயினார்நபியிறசூல்
பலரும்விழியால்காண பாங்கானமக்கந்தனில் (௪௭)

முன்காணும்போலே முதுகுப்புறத்தாலே
பின்காணுமெங்கள் பெருமாள்அஹ்மதர்காண் (௪௮)

நாளிமாக்கொண்டு நபியாயிரம்பேர்க்கு
தீனும்பசிதீர்த்த நயினார்முஹம்மதர்காண் (௪௯)

தாயுந்தகப்பனையும் தருமாய்ஹயாத்தாக்கி
தீன்வழியிலாக்கிவைத்த சுல்தான்முஹம்மதர்காண் (௫௦)

வெளிக்கிருக்கவேணுமென்று வீறுயிருமரத்தை
அழைத்தாரதுகள்வந்து அமைந்துமறைத்ததுகாண் (௫௧)

நாட்டாளிவந்து நயினருடனுரைத்தான்
காட்டும்புதுமையென்று காட்டினுரைப்பொழுது (௫௨)

மரத்தையழைத்து வடிவாய்க்கலாமுரைத்து
தூரத்தில்போவென்றுசொன்ன துய்யமுஹம்மதர்காண் (௫௩)

அப்பள் அறபியு அண்ணல்முஹம்மதர்க்கு
ஒப்பாகஈமான் உறுதியாய்க்கொண்டனர்காண் (௫௪)

அன்றுபிறந்த அணையாதபிள்ளையுடன்
வென்றியுடன்பேசிநின்ற வீரர்முஹம்மதர்காண் (௫௫)

குருவாம்முஹம்மதனார் கொடைகொடுக்கும்கையாலே
திரைபோல்நசல்பிணியை தொட்டாலப்போதகலும் (௫௬)

ஹாஜத்திருக்கவென்று கல்லினத்தையேவியபின்
நேசமுடன்கல்லினங்கள் நெருங்கிமறைந்ததுகாண் (௫௭)

வாய்க்காலின்அக்கரையில் வலியபெருங்கல்லினத்தை
நோக்கியழைத்தபின்பு நீர்மீதில்வந்ததுகாண் (௫௮)

ஈத்தமரக்கல்லுலயை யெங்கள்நபியழைத்து
ஏத்தாகபோகச்சொன்ன வெங்கள்நயினார்காண் (௫௯)

முந்நூறுபேர்களுக்கு மோசமறவோர்சஹனில்
அன்னஒஜீபனத்தை அழகாயமைத்தனர்காண் (௬௦)

அஹதானநாயகனை அருசேறிகாட்சிசெய்தோர்
உஹதுமலையை உதைத்தாரலையாமல் (௬௧)

ஈத்தமட்டைதனை யெடுத்துஉகாசத்துக்கு
ஏத்தமுள்ளபட்டயமாய் யீந்தார்பெரும்படையில் (௬௨)

உலந்தஉருஜூனை யூனமற்றபட்டயமாய்
கலந்துபெரும்படையில் கத்தியில்லாப்பேர்க்களித்தார் (௬௩)

ஆட்டுக்குரங்கு அஹ்மதுடன்நஞ்செனவே
தேட்டமுடன்தின்றபின்பு செப்பியுரைத்ததுகாண் (௬௪)

கடிந்தவிருளில் கரிதொளில்போலாமிருக்கு
தொடர்ந்தேதகிவந்ததுகாண் துய்யோன்பரக்கத்தினுல் (௬௫)

படைவந்துசூழ்ந்தபின்பு பயகாம்பர்மண்ணையள்ளிச்
சடுதியெறிந்தவர்கள் சங்கைகெட்டேயோடினர்கள் (௬௬)

ஒலுச்செய்ததண்ணீரை யுண்டோர்வசகேட்டு
மலைபோல்கண்டதுகாண் வரிசையுள்ளதண்ணீரால் (௬௭)

அன்னம்அருந்தயிலே அழகாய்தஸ்பீஹு
உன்னியுரைத்ததுகாண் உண்ணுங்களரிதனில் (௬௮)

நீழலடியில்லா நயினார்முஹம்மதர்க்கு
மீளவருகையிலே முகில்குடையாய்வந்ததுகாண் (௬௯)

ஏறவொண்ணாப்பெரும்மரத்தை யேறும்மரமாக்கிவைத்த
நூறெருளிவிலாசிதனை நோக்கிஹுமைமறுயெடுத்தார் (௭௦)

சப்புறமஞ்சேறி சங்கையுடனேஅறுஷில்
ஒப்புவமையில்லானை யுறும்விழியால்காட்சிசெய்தார் (௭௧)

ஹிருறும்துபைறும் கிருபையுள்ளோரேறினதால்
திருபாயலைந்ததுகாண் சந்தோஷமாய்குஷியாய் (௭௨)

மலையாலிருக்கையிலே வன்னப்புறுச்சிலந்தி
கலைபோல்கயறுநெய்து கருத்தாகக்கூவிற்றுகாண் (௭௩)

குப்பார்கள்வந்து குறித்தவர்கள்பார்த்தபின்பு
கப்பார்அவர்கள்கண்ணை யழித்தான்தெரியாமல் (௭௪)

வீட்டைவளைந்தபின்பு வீறுடையமண்ணையள்ளி
தேடியகாபிர்கள்மேல் தூவிநடந்தனர்காண் (௭௫)

சுறுகதெனுமவந்தங் துய்யபரிகால்நிலத்தில்
வராமல்பரிந்ததுகாண் வரிசையுடையோர்பொருட்டால் (௭௬)

பட்டயத்தாலே பயகாம்பரையொருவன்
வெட்வந்தகைசோர்ந்து வெறுமத்தியாகநின்றான் (எஎ)

கெஞ்சியிரந்தான் கிருபைநயினாரிடத்தில்
முஞ்சகுணமில்லார் முனியாமல்போகச்சொன்னார் (எஅ)

காதிம்அனசவர்க்கு கருதிதுஆவிரந்தார்
நாதனருளால் நலமிகுதிபெற்றார்காண் (எசு)

மஹ்மூதெனும்மவர்தம் வாக்குடையவதனந்தனில்
அஹ்மதுர்றசூல்மொழிந்தார் அழகம்புலிபோலானார் (அ0)

தாபிஅத்தென்பவர்க்கு நயினார்துஆவிரந்தார்
நோவுபிணியில்லாமல் நூற்றிருபதாயிருந்தார் (அக)

ஈகொசுகுமேலில் இராவேயொருகாலும்
நோக்கும்அடிமணலில்லா நூறுமுஹம்மதர்காண் (அஉ)

திட்டாந்தரம்மிகுதி சுல்தான்முஹம்மதர்க்கு
மட்டிலடங்காது பஹ்றுபோலாயிருக்கும் (அங)

வல்லபெரியவனே வள்ளல்நபியுடனே
தொல்லையறசுவர்க்கஞ் செல்லவுதவிசெய்வாய் (அச)

எழுகடலும் எழுவானமும்அறுஷும்
வாழ்வுடையோர்வஸ்பெழுத மாட்டாதுமைவறுகா (அரு)

முத்திரைபோடுகிறேன் மிஸ்கீன்சாமென்பவன்றான்
முத்திஉதித்தோர்தம் மேலானஅவ்ஸாபை (அசு)

துய்யசலவாத்துகொண்டும் துய்யகருணைகொண்டும்
மெய்யுடையநபிதமக்கும் விருப்பமுள்ளதோழருக்கும் (அஎ)

நபியுல்லாமாலைதன்னை நன்றாய்குறைதீர
பவனியுடன்கேட்டவர்க்கு பாவம்பிணிநோயகலும் (அஅ)

வல்லாயிதனைக்கொண்டு மாறும்துபொந்தலபன்
பல்லெங்கிலும்பீகதின் மன்றாட்டுதேடுகிறேன் (அகூ)

ஹாமீம்நபியுடைய கருணைமிகஉண்டாக
ஆமீன் ஆமீன் ஆமீன் அல்லாஉதவிசெய்வான் (௯0)

முற்றுபெற்றது.

017608

நம்மிடத்திற் விற்பனைக்குத் தயாரான தினுசுகள்,

சகாய விலைகள்.

விளம்பரம்.

(1-வது) எல்லாவித அறபுத்தமிழ் கிதாபுகள், குறு ஆன் ஷரீபுகள் செந்தமிழ் நாவல்கள் தமிழ்புத்தகங்கள், றப்பர் முத்திரைகள் உயர்வான செண்டுகள் அத்தர் முதலிய வாசனைத்திரவியங்கள், கூந்தல் வளரும் புஷ்பப்பரிமள எண்ணெய்கள், நாட்டு ஜவுளி கைவிதினுசுகள், மருந்து வகைகள், ஜர்மன் சில்வர் நகைகள், முதலியவைகளும், தேவையானவர்கள் நேருக்கத்திற்கும், வி. பி. போஸ்டு மூலமாகவும் நமக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

(2-வது) இன்னும் நம்மிடத்தில் தயாரில்லாத எந்த சாமான்களுக்கெழுதினாலும் அவைகளை நாம் வாங்கி மதராவில் ஏற்படும் அசல் கிரயத்திற்கு அனுப்பப்படும்.

(3-வது) இன்னும் மதராவிலுள்ள வி. பி. கம்பெனி வியாபாரிகளின் கேட்லாக்கிலுள்ள விலைகளை கண்டெழுதினாலும் நாம் அதது விலைகளிலுள்ள சரக்குகளை அவ்விலைகளுக்கே அனுப்பப்படும்.

(4-வது) எமது ஜவாபை விரும்பும் கனவான்கள் ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டு எழுதினால்மட்டும் அக்கடிதத்தில் குறித்த விஷயத்திற்கு பதிலெழுத விரும்புவோம்.

(5-வது) நமது கம்பெனியில் அச்சிட்ட சொந்த தினுசுகளில் 100-ரூபாய்க்குக் குறையாமல் வாங்கினால் 30-ரூபா புஸ்தகம் கூடுதல் கமிஷனுக்கு கொடுக்கப்படும். 100-ரூபாய்க்கதிகம், 25-ரூபாய்க்குமேல் வாங்கினால் 100-க்கு 25-ரூபா புஸ்தகம் விதம் கமிஷனுக்கு கூடுதல் அனுப்பப்படும்.

(6-வது) நமது கம்பெனியில் ஏற்படுத்திய புதிய கேட்லாக் தேவையான கனவான்கள் தமது விலாசங்களை விபரமாக எழுதி தெரிவித்தால் இனாமாய் அனுப்பிக் கொடுக்கப்படும்.

(7-வது) வெளிதினுசுகளானாலும் சரி மொத்தமாக வாங்கும் வியாபாரிகளுக்கு அதற்கேற்படும் நியாயமான கமிஷனை பிரத்தியோகம் கொடுக்கப்படும். லட்டர் எழுதி தெரிந்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

வா. மு. முஹம்மது யூசுபு லெப்பை.

அண்டு கம்பெனி,

நெ. 68, மூர்த்தெரு, முத்தியால்பேட்டை, மதராஸ்.